தினமலர்
புதுச்சேரி | வியாழன் | 6.12.2018

# புதுச்சேரி பல்கலையில் பயிற்சி முகாம்

## துணைவேந்தர் துவக்கி வைத்தார்




■ புதுச்சேரி பல்கலைக்கழகத்தில் நடந்த பயிற்சி முகாமில் பங்கேற்ற பிரெஞ்சு துாதரக கவுன்சில் ஜெனரல் கேத்ரன் சூயார்டுக்கு, துணைவேந்தர் குர்மீத் சிங் நினைவு பரிசு வழங்கினார்.

புதுச்சேரி, டிச. 6

புதுச்சேரி பல்கலைக்க முகமும், பிரெஞ்ச் இன்ஸ் டிடியூட்டும் இணைந்து ஏற்பாடு செய்துள்ள பயிற்சி முகாம் நேற்று துவங்கியது.

புதுச்சேரி பல்கலைக் கழகத்தின் சமூக அறிவியல் மற்றும் பன்னாட்டு ஆய்வியல் புலத்தின் கீழ் இயங்கும் சமூக ரீதியிலான கொள்கைகள் குறித்த ஆய்வு மையம், புதுச்சேரி பிரெஞ்சு இன்ஸ் டிடியூட் நிறுவனத்துடன் இணைந்து, 'நவீன உலகில் சமூக அறிவியலின் தற்போதைய நிலை மற்றும் எதிர்காலத்தில் எதிர் கொள்ள வேண்டிய சவால்கள்' என்ற தலைப்பிலான பயிற்சி முகாமிற்கு ஏற்பாடு செய்துள்ளது.

பயிற்சி முகாமின் துவக்க விழா, பல்கலைக் கழக வளாகத்தில் உள்ள தெற்காசிய ஆய்வு மைய கருத்தரங்க கூடத்தில் நேற்று நடந்தது.

புல முதன்மையர் பேராசிரியர் வெங்கட்ட ரகோத்தமன் வரவேற்றார். பிரெஞ்சு இன்ஸ்டிடியூட் இயக்குநர் பெடரிக் லாண்டி, பிரெஞ்சு துாதரக கவுன்சில் ஜெனரல் கேத்ரன் சூயார்டு ஆகியோர் கலந்து கொண்டு பேசினர்.

துணைவேந்தர் குர்மீத் சிங், பயிற்சி முகாமை துவக்கி வைத்து பேசும் போது, 'சமூக அறிவியல் மற்றும் பன்னாட்டு ஆய்வுத் துறையில் பல்வேறு உலக அளவிலான ஆய்வுகள் நடைபெற வேண்டும். அதற்கு பேராசிரியர்களும், ஆய்வுத்துறை மாணவர்களும் தங்கள் முழு பங்களிப்பை வழங்க வேண்டும்' என்றார்.

துவக்க விழாவை தொடர்ந்து நடந்த ஆய்வரங்கில், சூசுஸ்க்ஸ் பல் கலைக் கழகத்தின் மானுடவியல் பேராசிரியர் கீர்த்டி நேவி, ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழகத்தின் வரலாற்று ஆய்வாளர் கருணா டையட்ரிச் வீயிலெங்கா, சென்னை ஐ.ஐ.டி., பேராசிரியர் பினித்தா தம்பி உள்ளிட்டோர் கலந்து கொண்டு சமூக அறிவியல் தொடர்பான ஆய்வுக் கட்டுரைகளை வழங்கினார்.

வரும் 9ம் தேதி வரை நடக்கும் இந்த பயிற்சி முகாமில், நாடு முழுவதும் இருந்து 50க்கும் மேற்பட்ட ஆய்வுத்துறை மாணவர்கள் பங்கேற்றுள்ளனர்.